**கோயமுத்தூர் முதன்மை மாவட்ட நீதிமன்றம், கோயமுத்தூர்**

**T.O.S.No.1043/2025**

PW - 1

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 9 ஆம் நாள் வியாழக்கிழமை அன்று திருமதி ஜி.விஜயா, B.A.,M.L., PGDCFS முதன்மை மாவட்ட நீதிபதி, கோயமுத்தூர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் | செல்வராஜ் |
| தகப்பனார் பெயர் | |
| வயது | |
| முகவரி | |

**முதல் விசாரணை**

நான் அசல் வழக்கில் வாதி ஆவேன். வா.சா.1 ஆக எனது தரப்பு சாட்சியத்தை நான் சத்தியப்பிரமாணமாகத் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். மேலும் எனது சாட்சியத்தை உறுதிபடுத்துவதற்காக கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. 10-04-1964 தேதியிட்ட டிரஸ்ட் ஆவணத்தின் எஸ்.ஆர்.ஓ நகல் வா.த.சா.ஆ.1.
2. 07-08-2003 தேதியிட்ட 2 ஆம் பிரதிவாதியின் டிரஸ்ட் ஆவணத்தின் எஸ்.ஆர்.ஓ. நகல் வா.த.சா.ஆ.2.
3. 18-11-2024 தேதியிட்ட விற்கிரைய முன் ஒப்பந்தத்தின் அசல் வா.த.சா.ஆ.3.
4. 16-11-2024 தேதியிட்ட பதிவிறக்கம் செய்யப்பட்ட TSLR வா.த.சா.ஆ.4.
5. 25-09-2001 தேதியிட்ட மருதகுட்டி கவுண்டரின் இறப்பு சான்றிதழின் அசல் வா.த.சா.ஆ.5.
6. 02-11-2000 தேதியிட்ட 2 ஆம் பிரதிவாதி டிரஸ்ட்டின் அறங்காவலர் திரு.தனபாலின் தந்தை முத்துசாமி கவுண்டரின் இறப்பு சான்றிதழின் புகைப்பட நகல் வா.த.சா.ஆ.6.
7. எனது ஆதார் அடையாள அட்டையின் புகைப்பட நகல் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு வா.த.சா.ஆ.7.
8. முதல் பிரதிவாதியின் ஆதார் அடையாள அட்டையின் புகைப்பட நகல் வா.த.சா.ஆ.8.
9. 2 ஆம் பிரதிவாதி டிரஸ்ட்டின் அறங்காவலர் தனபாலின் ஆதார் அடையாள அட்டையின் புகைப்பட நகல் வா.த.சா.ஆ.9.

**1 ஆம் பிரதிவாதியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

தாவா சொத்தை 1 ஆம் பிரதிவாதிக்கு விற்பதற்கு எனக்கு ஆட்சேபணையில்லை. நியாயமான சந்தை மதிப்பிற்குதான் ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தை விற்று அந்த தொகையை 2 ஆம் பிரதிவாதி டிரஸ்ட்டிற்கு கொடுப்பதற்காகத்தான் ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது. அவ்வாறு பெறப்படும் தொகையை 2 ஆம் பிரதிவாதி டிரஸ்ட் பொது காரியங்களுக்கு பயன்படுத்துவதற்கு எனக்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை. நீதிமன்றம் பிறப்பிக்கும் உத்திரவிற்கு கட்டுபட நான் தயாராக இருக்கிறேன்.

**2 ஆம் பிரதிவாதியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

கிரைய ஒப்பந்தத்தில் 2 ஆம் பிரதிவாதி டிரஸ்ட்டின் அறங்காவலர் தனபாலும் கையொப்பம் செய்துள்ளார் என்று சொன்னால் சரிதான். கிரைய தொகையை 2 ஆம் பிரதிவாதி பொது காரியங்களுக்கு பயன்படுத்த எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை.

**மறு விசாரணை** இல்லை

sd/ செல்வராஜ்,

Taken down by me in open Court read over / interpreted to the witness and acknowledged by him / her to be correct.

Sd/G.Vijaya,
Principal District Judge,
Coimbatore.